1983 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவாணந்தம்: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாதது என்றாலும் நிரம்பப் டனிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் காள் கிறேன். தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன.

நென்மேனி அணைக்கட்டுத் திட்டம்

வினா எண். 73— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தாலுக்கா நென்மேனி அணைக்கட்டுத் திட்டம் இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ மற்றும் ஆ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவில், வைப்பாற்றின் குறுக்கே நென்மேனி; இருக்கங்குடி கிராமங்களுக்கருகே ரூ.6.90 லட்சம் மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து இந்த கேள்விகளுக்கு விடையளிக்கப் படுகின்ற இந்த நேரத்திலே அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்தத் திட்டத்திற்கு காஸ்ட் புரடக்ஷன் ரேஷீயோ எந்த அடிப்படையில் உள்ளது. இதனால் புதிய ஆயக் கட்டுகள் எத்தனை ஏக்கர் வரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இந்தத் திட்டத்தினுடைய பயன் செலவு விகிதம் 1: 24: 1 ஆகும், இது பயனுள்ள திட்டம் என்று கருதி 600 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்கியிருக் கிறது. இதன் காரணமாக 9156 ஏக்கர் புன்செய் நிலம் புதிய பாசனம் பெறும் என்றும், 614.11 ஏக்கர் நிலத்திற்குப் பாசனப் பற்றாக்குறை போக்கபடுமென்றும் 626.97 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதி கிடைக்கும் என்றும் இந்தத் திட்டத்தினால் உணவு உற்பத்தி சுமார் 10175 டன் கிடைக்கும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போது இந்தத் திட்ட வேலை முடிக்கப் படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான கால்கோள் விழா நடந்து இப்போது திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பாண்டலம் எரியிலுள்ள மதகுகன்கு

வினா எண். 74— திரு. சோ. கலித்தீர்த்தான்: மண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டலம் ஏரியில் உள்ள 2 பெரிய மதகுகள் பழுதாகி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்

(ஆ) இதற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவிற்கு முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நன்றி. இரண்டு மதகுகளில் ஒரு மதகின் பணி முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் ஒரு மதகு சீர் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் சுமார் 350 ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யமுடியாமல் இருக்கின்றன. அந்த பணியை இந்த ஆண்டிலேயே செய்து முடிக்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; தலைவர் அவர்களே. இன்னு இரண்டு, மூன்று மாதங்களில் அந்தப்பணியை முடித்து விடலாம் என்று அரசு கருதுகிறது.

உடைந்துப் போன ஆற்றங்கரைப்பட்டி ஆணையினை மீண்டும் கட்டும் திட்டம்

வினா எண். 75 திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையாற்றில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது உடைந்து போன ஆத்தங்கரைப் பட்டி அணையினை திப்பரவு என்னுமிடத்தில் மீண்டும் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?